Printed Matter

MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



# மலங்கரை கத்தோலிக்க திருஅவை 93-வது மறுவொன்றிப்பு தினம்

செப்டம்பர் 20

To

BOOK POST

If Undeliveried please return to ...

Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்




செப்டம்பர் 08

# இறை அன்னையின் பிறப்புத் திருநாள்

மலர் 20 செப்டம்பர் 2023 இதழ் 09

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 03.09.2023 | Sunday | 8.00 am<br>5.00 pm | Holy Mass<br>Holy Mass | Pallukuzhi |
| 06.09.2023 | Wednesday | 10.30 am<br>3.00 pm<br>6.30 pm | Shalom Home Blessing<br>AYF Inauguration<br>Holy Mass | Punaloor<br><br>Surulode |
| 08.09.2023 | Friday | | Holy Mass | Nilampur |
| 09.09.2023 | Saturday | 4.00 pm | Final Profession - SOC | Nadaikkavu |
| 10.09.2023 | Sunday | 4.00 pm | Golden Jubilee Celebration | Diocese of Palyamkottai |
| 11.09.2023 | Monday | 10.00 am<br>3.00 pm | Marriage<br>UCC Meeting | Vellachiparai<br>Nagercoil |
| 13.09.2023 | Wednesday | 11.30 am | Betrothal | TVM |
| 15.09.2023 | Friday | | Marriage | Thottavaram |
| 16.09.2023 | Saturday | | Reception to Msgr. Panamthundil | Trivandrum |
| 17.09.2023 | Sunday | 7.00 am<br>2.30pm | Holy Mass<br>IELTS Inauguration | Anakkarai<br>Kuzhithurai |
| 19.09.2023 | Tuesday | | Class for Fathers | |
| 20,21.09.2023 | | | Reunion Day Celebration | Moovattupuzha |
| 29.09.2023 | Friday | | Preaching | Kandanvilai |
| 30.09.2023 | Saturday | | Preaching | Emmaus - Thindivanam |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்

## MARTHANDAM DIOCESAN BULLETIN

மலர். 20 செப்டம்பர் 2023 இதழ். 9

THE MALANKARA SYRIAN CATHOLIC CHURCH

## BULLETIN OF THE
## DIOCESE OF MARTHANDAM

*PATRON*

*His Excellency Most Rev. Vincent Mar Paulos*

*EDITOR*

*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

*COVER DESIGN*

*Mrs. Uni Kumari B.*

*PRINTING*

*Santhom Press,*
*Marthandam*

*PUBLISHED BY*

*The Chancellor*
*Diocese of Marthandam*



**மலங்கரை சுறியானி கத்தோலிக்கத் திருஅவை**
**2023 -ஆம் ஆண்டு அன்னையர் தினத்தை முன்னிட்டு**
**குடும்பநல ஆயர் மாமன்ற பணிக்குழு தலைவர்**

**வழங்கும் சுற்றறிக்கை**

## அன்னையர் தினக் கொண்டாட்டம்

***மதிப்பிற்குரிய ஆயர்களே, கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றாம்பான்மார்களே, குருக்களே, துறவிகளே, இறையேசுவில் அன்புமிக்க சகோதர சகோதிரிகளே,***

தாய்மையின் மகிமையை நினைவுக் கூரவும், புதுத்தலைமுறைக்கு உத்வேகமூட்டவும் உலகில் அன்னையர் தினம் கொண்டாடப்படுகிறது. மனைவி, தாய், குடும்ப தலைவி என்னும் நிலைகளில் பெண்கள் தங்கள் கடமைகளை புரிந்து கொள்ளவும், அதற்கேற்ப தங்கள் வாழ்வை முறைப்படுத்தும் நோக்கத்துடனும் திருஅவையில் பெண்களுக்கான இயக்கங்களும், அன்னையர் தினக் கொண்டாட்டங்களும் தொடங்கப்பட்டன. 1913-ம் ஆண்டு இங்கிலாந்து நாட்டிலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் பேராயர் கர்தினால் ப்யூன் கத்தோலிக்க தாய்மார் சங்கம் என்னும் பெயரில் அன்னையர் அமைப்பை தொடங்கினார். 1939-ம் ஆண்டு இந்த அமைப்புக்கு இந்தியாவிலும் பல்வேறு நாடுகளிலும் அதிகாரப்பூர்வமாக அங்கீகாரம் கிடைத்தது. மலங்கரை கத்தோலிக்க திருஅவையில் தாய்மார் சங்கம், பெண்கள் சங்கம் போன்ற பெயர்களில் இந்த இயக்கம் குடும்பநல பணிக்குழுவின் ஒரு பகுதியாக செயல்பட்டு வந்தன. 2021-ம் ஆண்டு பெப்ருவரி 27-ம் நாள் முதல் நடைபெற்ற தூய ஆயர் மாமன்றத்தில் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவையின் தாய்மார் சங்கத்திற்கு Malankara Catholic Mothers Forum (MCMF) என்று பெயரிடப்பட்டது. MCMF-ன் விதிமுறைகளுக்கு திருஅவையின் தலைவரும், தந்தையுமாகிய

காதோலிக்க பாவா 2023, ஜூன் 10-ம் நாள் அங்கீகாரம் வழங்கினார். இவ்வாறு நமது திருஅவையில் அன்னையர் சங்கம் பிற பணிக்குழுக்களோடு இணைந்து வலுவான நிலையில் செயல்பட்டு வருகிறது. தூய மோனிக்காவை MCMF-ன் விண்ணக பாதுகாவலராக நாம் ஏற்று கொண்டுள்ளோம். புனித மோனிக்காவின் திருநாள் ஆகஸ்ட் மாதம் 27-ம் நாள் ஞாயிற்றுகிழமை அகில உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. இந்நாளை மலங்கரை கத்தோலிக்க திருஅவையில் MCMF தினமாக கொண்டாடுகிறோம். எனவே இம்மாதம் 27-ம் தேதி அலகு, மறைவட்ட மற்றும் மறைமாவட்ட தளங்களில் இவ்விழாவை கொண்டாட அன்போடு நினைவூட்டுகிறேன். தொடக்க நிலையில் இருக்கும் MCMF-க்கு உங்கள் அனைவருடைய உளப்பூர்வமான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன். MCMF-இல்லாத பங்குகளில் அதன் அலகுகளை ஆரம்பிக்க பங்கு தந்தையர்கள் முயற்சிக்க வேண்டும் என நினைவூட்டுகிறேன். அகஸ்தீனாரை, புனித அகஸ்தீனாராக உருவாக்கிய தூய மோனிக்கா நமக்காக பரிந்து பேசட்டும். இந்த புனிதை தாய்மையின் தனித்துவத்தை இந்த உலகிற்கு அறிவிக்கின்றார். பாவ சேற்றில் மூழ்கி கிடந்த மகனை, உண்மை விசுவாசத்திற்கும், நன்மையில் நாட்டம் கொண்ட வாழ்வுக்கும் கரம் பிடித்து வழிநடத்த நோன்பும், உபவாசமும் இருந்து கண்ணீருடன் மன்றாடிய ஒரு தாய். இவர் எல்லா தாய்மார்களுக்கும் சிறந்த முன்மாதிரி. புனித அகஸ்தீனார் தாயின் சிறப்பை கூறுவது குறிப்பிடதக்கது, “எனது அம்மாவின் அன்பை விவரிக்க வார்த்தைகள் இல்லை. ஒரு சொல்லாலும், பார்வையாலும் இதயத்தை இறைவேண்டலில் எழுப்ப அம்மாவுக்கு முடிந்தது. ஓ ! இறைவா நீர் எனக்கு இத்தகைய தாயை தந்ததால் நான் உமக்கு மகனாக இருக்கிறேன்”. (Confession, St.Augustin) இன்றைய உலகில்



கடவுளை சொந்தமாக்க, மக்களை தூண்டும் தாய்மார்கள் தேவை. நன்மையின் விதைகள் குடும்பத்தில் வேரூன்ற தேவையான உரமும், தண்ணீரும், ஜெபத்தாலும், கண்ணீராலும் வழங்கிய தூய மோனிக்காவின் தாய்மை எவ்வளவோ மேன்மையானது. அருள்நிறைந்த குடும்பங்களை உருவாக்க அன்னையர்கள் அயராமல் உழைக்க வேண்டும். தாயும், மகனும் புனித நிலை கண்ட வாழ்க்கைப் பாடம் நம்முன் ஒரு சவாலாக நிற்கிறது.

திருதந்தை பிரான்சிஸ் 2015-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தாய்மை குறித்து கூறியது குறிப்பிடத்தக்கது: தாய்மை ஒரு ஒப்பற்ற செல்வம், தாய்மை ஒரு பரிசு, தாய்மை ஒரு இரத்த சாட்சியம், தாய்மை நம்பிக்கையின் முதல் வேர். நிபந்தனையற்ற அன்பாலும், தியாகம் கலந்த அக்கறையாலும் தாய்மை தனிமனித வாதத்திற்கும், தன்நலத்திற்கும் எதிரான மாற்று மருந்தாக உள்ளது. இறையன்னையை போல தாய்மையை தனது வாழ்வின் மிகச்சிறந்த பொக்கிஷமாக கருதினால் ஒவ்வொரு தாயும் உலகில் சிறந்த மதிப்பு பெற்ற தாயாக ஏற்று கொள்ளப்படுவார். திருஅவையும், சமூகத்தையும் உருவாக்குவதற்கும் புதிய தலைமுறையை கட்டியெழுப்புவதற்கும் கடவுள் தந்த கொடையே தாய்மை. ஒரு குழந்தையை ஈன்றெடுக்க ஒரு தாய் தயாராகும் போது நடத்தும் மன்றாட்டும், உள்வாங்கும் மௌனமும், வேதனையும் அவள் கடவுள் முன் சரணடைவதை குறிப்பிடுகிறது. அவ்வாறு அன்னை மரியாவை போல் இதோ நான் ஆண்டவரின் அடிமை என்று கூறி உயிரை கொடையாக வழங்கும் ஆசீரை கிடைக்க பெறுகிறார். தொப்புள் கொடி உறவு வாயிலாக அன்பையும், நம்பிக்கையையும் பகிர்ந்து கொள்கிறார். தாய்மைக்கு எதிராக தோன்றும் அம்சங்கள் ஏராளம்; விவாகரத்து, கருச்சிதைவு, பாலின வேறுபாடு, குடும்ப பிரச்சனைகள், தனிமைப்படுத்துதல்கள் போன்றவை ஒரு சில மட்டுமே. தாய்மார்களின் எதிர்சாட்சிய வாழ்வு

தாய்மையின் மகிமைக்கு தோய்வு ஏற்படுத்துகிறது. தூய இறையன்னையின் தாய்மைக்கு நமது பார்வைகளை திருப்புவோம். கடவுளின் திருமுன் அருளை கண்டடைந்த தூய இறையன்னையின் தாய்மை நம்முடைய விசுவாச வாழ்வுக்கு ஒளி பகிரட்டும்.

இந்த ஆண்டு நாம் கொண்டாடும் அன்னையர் தினத்துக்கு "அருள்அடையாள வாழ்வை ஆற்றல்படுத்துவோம்" என்னும் மையச் சிந்தனையை தேர்ந்து கொண்டிருக்கிறோம். அருளின் வாய்கால்களே அருளடையாளங்கள். அருளடையாளங்களில் உள்ள பங்கேற்பு, நமது வாழ்வை புனிதப்படுத்தும், குடும்பங்களை அருளால் நிறைத்துவிடும். இந்த சிந்தனையோடு இன்னும் சிலவற்றை சிந்தனை பொருளாக்க அறிவுறுத்துகிறேன். போதைக்கு எதிராக செயல்படுதல், கருச்சிதைவிலிருந்து அகன்றிருத்தல், குடும்பங்களுக்கிடையே உள்ள உரையாடல் போன்றவற்றையும் சிந்தனை பொருளாக கொள்வோம். மின்னிலக்க உலகில் ஒரு மணி நேரமாவது குடும்ப உறுப்பினர்கள் முகம் பார்த்து பேச வேண்டும். அது குடும்பத்திற்கு மகிழ்ச்சியை கொடுக்கும். MCMF தினத்தில் தாய்மார்களுக்காக சிறப்பாக ஜெபிப்போம். அவர்களை கௌரவப்படுத்துவோம். இந்த தினத்தில் பிள்ளைகள் இணைந்து தாய்மார்களுக்கு வழங்குகின்ற ஒரு பரிசாக அன்னையர் தினவிழா அமைய வாழ்த்துகிறேன்.

*என்றும் அன்புடன்,*

† மேதகு ஆயர் **யூஹானோன் மார் தியோடோஷியஸ்**
குடும்பநல ஆயர் மாமன்றத்திற்கான பணிக்குழு தலைவர்
மூவாற்றுபுழை மறைமாவட்ட ஆயர்

15-08-2023
காதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்.



## மலங்கரை சுறியானி கத்தோலிக்கத்திருஅவை
## மறைக்கல்வி தினம் 2023

***அன்பார்ந்த குருக்களே, துறவிகளே, கோர்-எப்பிஸ்கோப்பாமார்களே, ஆசிரிய பெருமக்களே, பெற்றோர்களே, அன்பு மாணவச் செல்வங்களே,***

ஆகஸ்ட் மாதம் 6-ம் நாள் மறைக்கல்வி தினத்தை கொண்டாடுகிறோம். இந்நாள் நமது பிள்ளைகளை இறைமக்களாக வளர்த்த நாம் செய்திருக்கும் அர்பணத்தை புதிதாக்கம் செய்து வலுவூட்ட காரணமாக அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

திருவிவிலியத்தின் மக்கபேயர் புத்தகத்தில் தியாகச் சுடர் விடும் நிகழ்வொன்றை பார்கின்றோம். ஒரு தாயும் ஏழு பிள்ளைகளும் இரத்த சாட்சிகளாக மாறிய நிகழ்வுற்றிய செய்தி அது. திருவிவிலியம் இத்தாயின் பெயரை குறிப்பிடாததால் சுறியானி சபை இவரை "எனது பெயர்" என பொருள்படும் ஸ்மூனி என்று அழைக்கிறது.

இறைமக்களை துன்புறுத்திய கொடியோன் அந்தியோக்கியஸ் அரசன் ஸ்மூனியையும் ஏழு பிள்ளைகளையும் கைது செய்தார். அத்தோடு யூத சடங்கு முறைகளுக்கு எதிராக செயல்பட கட்டாயப்படுத்தினார். அதை மறுத்த பிள்ளைகளையும் ஒவ்வொருவராக தாய் முன்னிலையிலேயே துன்புறுத்தி கொன்றான். இளைய மகன் மட்டும் கொல்லப்படவில்லை. இத்தருணத்தில் தனது விருப்பத்தின்படி செயல்பட்டால் செல்வமும், பதவிகளும் அதிகாரமும் வழங்குவதாக அரசன் வாக்களித்தான். அதற்கு அவனைத் தூண்டும் பொருட்டு தாயும் கட்டாயப்படுத்தப்பட்டாள். ஆனால் அந்த தாயோ படைப்பின் ஆண்டவரின் இரக்கமே எல்லாவற்றிற்கும் மேலானது என நினைவூட்டி இரத்த சாட்சியாக மாற அவனுக்கு தூண்டுதலளித்தாள். இறுதியில் தாயும் மகனும் இரத்த சாட்சிகளாக மாறினர் (2மக் 7). பிற்காலத்தில் உரோமை பேரரசில் மதத்தின் பெயரால்

துன்புறுத்தல்கள் நடந்தபோது அதை துணிவுடன் ஏற்றுக்கொள்ள கிறிஸ்தவர்களுக்கு இந்நிகழ்வு துணிவும் மாதிரியுமாக மாறியது. எனவே சுறியானி திருஅவையில் தூய ஸ்மூனி புதிய ஏற்பாட்டு கால புனிதரை போல் வணங்கப்படுகின்றார். கிறிஸ்தவர்களாகிய நாம் நம்பிக்கையின் பொருட்டு துன்புறும் காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். மணிப்பூர் மற்றும் பல்வேறு இடங்களில் துன்ப பாடுகள் ஏற்கும் கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலும், ஆண்டவரின் உதவியும் கிடைக்க இணைந்து ஜெபிப்போம்.

மலங்கரை கத்தோலிக்க திருஅவை வாழும் பகுதிகளில், மதத்தின் பெயரிலான துன்புறுத்தல்களின் சூழல் அதிகமாக இல்லை. நம்பிக்கை பயிற்சியை மையமாகக் கொண்டு சிந்திக்கும் போது அந்தியோக்கியஸ் அரசன் இளைய மகனுக்கு வாக்களித்த பணமும், பொருளும், அதிகாரமும் முக்கியத்துவம் பெறுகிறது. தொடக்கநிலை வகுப்புகள் முதல் மேல்நிலைகளை அடைவதற்கான போராட்டமாக அடிப்படைக் கல்வி மாறியிருக்கிறது. எவ்வாறாயினும் பிறரை விட முன்னேறி தங்கள் வாழ்க்கை பயணத்தை செம்மைப்படுத்த இன்றைய சிறுவர்கள் தெரிந்தும் தெரியாமலும் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இன்றைய கலாச்சாரம் கடவுளை மறுக்க கட்டாயப்படுத்தப்படா விட்டாலும் கடவுளை முதலிடத்தில் வைப்பதற்கும் உலகு சார் வளர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும், நமது பிள்ளைகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். வெற்றிக்கான ஓட்டத்தில் செபத்திற்கும், மறைக்கல்விக்கும் நேரம் இல்லாமல் போகிறது. நமது பிள்ளைகளும் பெற்றோர்களும் புரிந்து கொள்ள வேண்டிய சில பாடங்கள் தூய ஸ்மூனியின் வாழ்க்கையில் உண்டு.

அனைத்திற்கும் அடிப்படை கடவுளே. நம்மை படைத்தவர் அவரே. ஒரு தாய் தனது பிள்ளைக்கு கொடுக்கும் அறிவுரையின் முக்கிய பகுதி இதுவே. அனைத்தையும் பாராமரிப்பவரும் அவரே.



உலகம் தரும் வளமையை விட கடவுளின் அருள் சிறந்தது என்று இந்த தாய் தனது பிள்ளைகளுக்கு நினைவூட்டுகிறாள். எல்லா சாதனைகளும் நன்மை தருவது அல்ல எல்லா வெற்றிகளும் நமக்கு அமைதியும், திருப்தியும் தருவதில்லை. கடவுளின் திருவுளத்திற்கேற்ப செயல்படும் போது நன்மை உளவாகிறது. கடவுளின் கரம் பிடித்து முன்னோக்கி பயணம் செய்யும் போது வெற்றியை அடைகிறோம். நமது சாதனைகளை நன்மைகளாக மாற்றும் கடவுளின் அருளுடன் இணைந்து வாழ நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு பயிற்சி வழங்க வேண்டும்.

நமது திருஅவையில் நம்பிக்கை அடுத்த தலைமுறைக்கு நன்றாக பகிரப்படுகிறது. எனினும் சில வேளைகளில் கடவுளுக்கு இடம் கொடுக்காத வாழ்க்கைக்கு குழந்தைகளை இட்டுச்செல்ல காரணங்களாக இருக்கும் பெற்றோர்களை வருத்தத்துடன் நினைவு கூறுகிறேன். மறைக்கல்வியையும், ஞாயிற்றுகிழமை நிகழ்வுகளையும் புறக்கணித்து, Tuition மற்றும் பயிற்சிகள் ஒழுங்குப்படுத்துகின்ற பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு செய்வது துரோகமே என உணர்ந்து கொள்ள வேண்டும்.

நன்மையில் நாட்டமின்றி உலகு சார் வெற்றிகளை நோக்கி வளரும் பிள்ளைகள் உண்மையில் மகிழ்ச்சியோ திருப்தியோ அடைவதில்லை. செபத்திற்கும் நம்பிக்கை பயிற்சிக்கும் வாய்ப்புகள் ஏற்படுத்தும் போது உலகு சார் சாதனைகள் குறைந்து போகும் என எண்ணுவது தவறானது. தூய திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் தனது திருத்தூதுவ பணியின் தொடக்கத்தில்குழந்தைகளுக்கு வழங்கிய செய்தி குறிப்பிடதக்கது. "கிறிஸ்துவுக்காக வாசல்களை திறந்திடுங்கள்" கிறிஸ்துவுக்காக வாசல்களை அகல திறந்திடுங்கள். பயப்படாதீர்கள் அவர் எதையும் கவர்ந்து விடுபவர் அல்ல, எல்லாவற்றையும் வழங்குபவர்.

வாழ்வில் கடவுளுக்கு இடமளிக்கும் போது நமது பிள்ளைகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படுவதில்லை. நாம் தேடி கண்டடைவதை விட நிலையான ஒளிமயமான வாழ்க்கை சூழல்களை அவர் அவர்களுக்கு வழங்கிடுவார்.

உலகுசார் இன்பங்கள் உயர்த்தும் சவால்களை சந்திக்க செயலாக்கமிக்க திட்டங்களை வகுத்திட வேண்டும். திருஅவை தன்னை புதிப்பித்துக் கொள்ள வழிமுறைகள் ஆராயும் காலம் இது. படைத்து பாராமரிப்பவாராகிய கடவுளிடம் அடைக்கலம் தேடுவது தான் ஆன்மீகத்தின் அடித்தளம். கடவுளிடம் அடைக்கலம் தேடுபவர்கள் அனைத்தையும் செபத்தோடு செய்கின்றனர். அவர்கள் கடவுளின் திருவுளத்தை புரிந்து கொள்ள முயல்கின்றனர். அவர் நன்மையே செய்வதால் அனைவருக்கும் நன்மை செய்ய விரும்புகிறார் (மத் 5:43) இதுவே இன்றைய இளம் தலைமுறைக்கு நாம் சுட்டிக்காட்ட வேண்டிய நம்பிக்கை வாழ்வின் உள்ளடக்கம்.

திருவழிபாடு பற்றிய பயிற்சி, மறைக்கல்வி, MCCL என மூன்று பகுதிகளாக நம்பிக்கை பயிற்சி திட்டமிடப்பட்டிருக்கிறது. எப்போதும் செபிப்பது, இறைவனின் திருவுளத்தை புரிந்து கொள்வது, நன்மையில் நாட்டம் கொள்வது இம்மூன்று காரியங்களில் பிள்ளைகளுக்கு அடிப்படை பயிற்சி தேவைப்படுகிறது. இப்பயிற்சி பயன்தர வேண்டுமானால் இப்பயிற்சியை பெற்றோர்கள் இல்லங்களில் தொடர்ந்து கொடுக்க வேண்டியது இன்றியமையாதது. செபிப்பது, இறைவார்த்தை வாசிப்பது உடன் தோழர்களுக்கு நன்மை செய்யும் மனநிலை போன்றவற்றை உலகுசார் சாதனைகளை விட உயர்ந்த மதிப்பீடுகளாக பிள்ளைகளுக்கு சுட்டி காட்ட பெற்றோர்களுக்கு இயல்வது போல் எவருக்கும் இயலாது.

கடவுளின் அன்பை அறிந்து முழு இதயத்தோடு அவரது இரக்கத்தில் அடைக்கலம் புகுந்து கிறிஸ்துவோடு வாழ்ந்து வெற்றி



காண நமது பிள்ளைகளுக்கு இயலும். இம்முயற்சியில் பெற்றோருக்கு தகுந்த விழிப்புணர்வு வழங்க உதவும் செயல்திட்டங்களை ஒவ்வொரு மறைமாவட்டமும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப உருவாக்கி செயல்படுத்த இணைந்து முயற்சிக்க வேண்டும். சவால்களை சந்திக்கும் இந்த காலகட்டத்திலும் மறைக்கல்வி திருப்பணி சிறப்பாக நடைபெறுவது எதிர்நோக்கை தருகிறது. நம்பிக்கை பயிற்சி திருப்பணிகளின் பல்வேறு நிலைகளில் தியாக உள்ளத்துடன் சேவை செய்து வரும் அனைவருக்கும் திருஅவையின் பெயரில் நன்றி கூறிக் கொள்கிறேன். சோதனைகளின் மத்தியிலும் நம்பிக்கையின் பாடங்களை பயிற்றுவிக்கின்ற பெற்றோர்களை நான் சிறப்பாக பாராட்டுகிறேன். மறைக்கல்வி தினத்தன்று அனைத்து பங்குகளிலும் மறைக்கல்வி கொடியேற்றி உறுதிமொழி எடுத்து மறைக்கல்வி தினத்தை சிறப்பிக்க அழைப்பு விடுக்கின்றேன். அதுபோன்று மறைக்கல்வி தின சிறப்பு காணிக்கையை இரண்டு வாரத்திற்குள் மறைமாவட்ட நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த தொகையானது முற்றிலும் மறைமாவட்ட மறைக்கல்வி பணிகளுக்காக செலவிடப்படும்.

அவரைதேடிச் செல்வோருக்கு தக்க கைம்மாறு அளிப்பவரே கடவுள் (எபி.11:6)

உங்கள் அனைவரையும் கடவுள் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

+ Eusebius

† மேதகு ஆயர் **தோமாஸ் மார் எவுசேபியோஸ்**
மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருஅவை
நம்பிக்கை பயிற்சி பணிக்குழு தலைவர் &ஹம்ல்;
பாறசாலை மறைமாவட்டம் ஆயர்

28-07-2023
கதோலிகேட் மையம்
பட்டம், திருவனந்தபுரம்

# Bishop's Feast Day Charity Fund
# Diocese of Marthandam
# 2022 - 2023

## 1. Convents

| No. | Convents | Amount |
|---|---|---|
| 1 | Bethany Sisters, Ambilikonam | 3,000.00 |
| 2 | Bethany Sisters, Nalanchira | 15,000.00 |
| 3 | Bethany Sisters, Kanya Kumari | 3,000.00 |
| 4 | Bethany Sisters, Nagercoil | 2,000.00 |
| 5 | Bethany Sisters, Mukkampala | 3,000.00 |
| 6 | Bethany Sisters, Kumarapuram | 2,000.00 |
| 7 | Santhi Ashram | 10,000.00 |
| 8 | DM Provincilate, Veniyoor | 10,000.00 |
| 9 | Holy Spirit Sisters | 5,000.00 |
| 10 | St.Mary's Province, Pongamoodu | 20,000.00 |
| 11 | D.M Generalate, Kodapankunnu | 15,000.00 |
| 12 | Stella Mary's, Kanya kumari | 3,000.00 |
| 13 | D.M Convent, Kumaracoil | 1,000.00 |
| 14 | Tara Hostel, Nagercoil | 2,500.00 |
| 15 | Attoor DM, Convent | 1,000.00 |
| 16 | D.M Convent, Panachamoodu | 5,000.00 |
| 17 | Provincilate Marthandam | 25,000.00 |
| 18 | D.M Convent, Mathar | 2,000.00 |
| 19 | Asssai Nilayam, Marthandam | 2,000.00 |
| 20 | D.M. Convent, Pilankalai | 2,000.00 |
| 21 | D.M. Convent, Chellamkonam | 2,000.00 |
| 22 | D.M. Convent, Meenachal | 1,000.00 |
| 23 | D.M. Convent, Fathimanager | 1,000.00 |
| 24 | D.M. Convent, Mariagiri | 1,000.00 |
| 25 | Emmaus, Pilankala | 2,000.00 |
| 26 | D.M. Convent, Pushpagiri | 1,000.00 |
| 27 | D.M. Convent, Kaliyal | 1,000.00 |
| 28 | D.M. Convent, Kirathoor | 1,000.00 |
| 29 | D.M. Convent, Kanchiyode | 5,000.00 |
| 30 | D.M. Convent, Vimalapuram | 1,000.00 |
| 31 | D.M. Convent, Anakarai | 1,000.00 |
| | **Total** | **1,48,500.00** |



## 2. Individual

| No. | Individual | Amount |
|---|---|---|
| 1 | Major Y. Selvam, Salvation Army | 5,000.00 |
| 2 | Adv. Jose Benedict | 5,000.00 |
| 3 | Er. Francis Raj, Palavilai | 5,000.00 |
| 4 | Er. Jose | 10,000.00 |
| 5 | Chellathurai & Sicily Family | 5,000.00 |
| 6 | Mr.James Wilson -Sigma Group | 5,000.00 |
| 7 | Adv. Arul Prakash Singh | 5,000.00 |
| 8 | Dr. Vino | 500.00 |
| 9 | Angelos Associates, Marthandam | 5,000.00 |
| 10 | Mr.Varghese, Fathima Traders | 10,000.00 |
| 11 | Mr.Cyril, Ideal | 15,000.00 |
| 12 | Mr.Gnandas, Arumani | 2,000.00 |
| 13 | Matha Thangamaligai, Marthandam | 10,000.00 |
| 14 | Mr.Ponnumani, FL | 5,000.00 |
| 15 | Mr.Jobin | 2,000.00 |
| 16 | Mr. Sabu | 1,000.00 |

| | | |
|---|---|---|
| 17 | Mr. Varghese, Panachamoodu | 5,000.00 |
| 18 | Mrs. Rosamaal Maria Russel | 1,000.00 |
| 19 | Mr. Rajan & Vijayan | 25,000.00 |
| 20 | Mr. Francis | 2,000.00 |
| 21 | Mrs. Immaculate Philip | 2,000.00 |
| 22 | Mr. John Justin & Maria Selvi | 1,000.00 |
| 23 | Mr. Arul Jose Manjusha | 1,000.00 |
| 24 | Mr. Paul Raj, Koikalthoppu | 5,000.00 |
| 25 | Mr. Chrystal Antony | 5,000.00 |
| 26 | Mr. Albert, Kirathoor | 500.00 |
| 27 | Mr. Justin, Kirathoor | 1,000.00 |
| 28 | Mr. Thankaraj, Correspondent Office | 2,000.00 |
| 29 | Mr. Thomas Kutty, Panachiacal | 5,000.00 |
| 30 | Fr. Jose Kizhakedath | 25,000.00 |
| 31 | Ivans Family, Australia | 10,000.00 |
| | **Total** | **1,86,000.00** |

## 3. Schools

| No. | Schools | Amount |
|---|---|---|
| 1 | MSC Schools | 115,336.00 |
| 2 | Little Flower School, Pushpagiri | 10,000.00 |
| 3 | St.Mary's, Mariagiri | 25,000.00 |
| 4 | St.Xaviers, Palavilai | 5,000.00 |
| 5 | Mar Ivanios, Kuzhithurai | 10,000.00 |
| 6 | Mar Gregorios, Kirathoor | 20,000.00 |
| 7 | Mary Mount, Annakarai | 10,000.00 |
| 8 | Christuraja, Marthandam | 10,000.00 |
| | **Total** | **2,05,336.00** |



## 4. Colleges

| No. | Colleges | Amount |
|---|---|---|
| 1 | MCC | 100,000.00 |
| 2 | Mar Ephream Engineering College | 91,298.00 |
| 3 | Malankara School of Commerce | 10,000.00 |
| 4 | Mar Chrysostom Bed College | 10,000.00 |
| | **Total** | **2,11,298.00** |

## 5. Pious Association

| No. | Pious Association | Amount |
|---|---|---|
| 1 | Vincent De Paul | 3,000.00 |
| 2 | Catechism | 2,000.00 |
| 3 | MCA | 5,000.00 |
| 4 | Legion of Mary | 1,000.00 |
| 5 | Mother's Forum | 5,000.00 |
| 6 | Pastoral Council | 5,200.00 |
| 7 | UCCC Mtm | 10,000.00 |
| 8 | MIDS | 50,000.00 |
| 9 | HOM | 5,000.00 |
| 10 | St. Paul's Education Academy | 5,000.00 |
| | **Total** | **91,200.00** |

## 6. Kaliakkavilai District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Mariagiri | 10,000.00 |
| 2 | Nadaikkavu | 10,000.00 |
| 3 | Koickathoppu | 5,000.00 |
| 4 | Meenachal | 3,000.00 |

| | | |
|---|---|---|
| 5 | Mecode | 10,000.00 |
| 6 | Mankadu | 5,000.00 |
| 7 | Adichavilagam | 5,000.00 |
| 8 | Sooriacode | 3,000.00 |
| 9 | Chekkittuvilai | 1,000.00 |
| | **Total** | **52,000.00** |

## 7. Kollamcode District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Ambilikonam | 5,000.00 |
| 2 | Pallukuzhy | 2,000.00 |
| 3 | Pushpagiri | 5,000.00 |
| 4 | Fathimanagar | 5,000.00 |
| 5 | Pinkulam | 3,000.00 |
| 6 | Oorambuvilai | 3,000.00 |
| 7 | Kidarakuzhy | 4,000.00 |
| 8 | Palavilai | 5,000.00 |
| 9 | Kaduvakuzhy | 2,000.00 |
| 10 | Adaikkakuzhi | 5,000.00 |
| 11 | Kirathoor | 10,000.00 |
| 12 | Manjathoppu | 1,000.00 |
| | **Total** | **50,000.00** |

## 8. Kulasekharam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Charoor | 3,000.00 |
| 2 | Ganapathikal | 2,000.00 |
| 3 | Kulasekharam | 2,000.00 |
| 4 | Pechipparai | 3,000.00 |



| | | |
|---|---|---|
| 5 | Mukkampala | 1,000.00 |
| 6 | Anakkarai | 5,000.00 |
| 7 | Muthalar | 3,000.00 |
| 8 | Mathar | 5,000.00 |
| 9 | Cherupalloor | 3,000.00 |
| 10 | Peruvazhikkadavu | 2,000.00 |
| 11 | Zero Point | 1,000.00 |
| 12 | Sivalogam | 2,000.00 |
| 13 | Verkilambi | 2,500.00 |
| 14 | Surulode Shrine | 2,000.00 |
| | **Total** | **36,500.00** |

## 9. Panachamoodu District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Panachamoodu | 5,000.00 |
| 2 | Vettukuzhi | 3,000.00 |
| 3 | Puliyoorsala | 2,000.00 |
| 4 | Keezmancode | 2,000.00 |
| 5 | Kanchiyode | 3,500.00 |
| 6 | Kulapparai | 3,000.00 |
| 7 | Vellachipparai | 2,500.00 |
| 8 | Karumanoor | 3,000.00 |
| 9 | George Nager (Mughavoor) | 5,000.00 |
| 10 | Arumani | 7,000.00 |
| 11 | Chempakatharisu | 1,000.00 |
| | **Total** | **37,000.00** |

## 10. Marthandam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Attoor | 5,000.00 |
| 2 | Mathoorkonam | 3,000.00 |
| 3 | Kuzhithurai | 5,000.00 |
| 4 | Marthandam | 20,000.00 |
| 5 | Kannacode | 3,000.00 |
| 6 | Unnamalakadai | 5,000.00 |
| 7 | Chitharal | 2,500.00 |
| 8 | Soosaipuram | 5,000.00 |
| 9 | Vimalapuram | 5,000.00 |
| 10 | Serottukonam | 1,000.00 |
| 11 | Konam | 3,000.00 |
| 12 | Valiyavilai | 3,000.00 |
| | **Total** | **60,500.00** |

## 11. Azhakiyamandapam District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Vazhodu | 2,000.00 |
| 2 | Seynamvilai | 2,000.00 |
| 3 | Pilankala | 12,000.00 |
| 4 | Poonthoppu | 2,000.00 |
| 5 | Alwarcoil | 1,500.00 |
| 6 | Chellamkonam | 10,000.00 |
| 7 | Kattuvilai | 3,000.00 |
| 8 | Punkarai | 2,000.00 |
| | **Total** | **34,500.00** |



## 12. Nagercoil District

| No. | Parish | Amount |
|---|---|---|
| 1 | Christuvilagam | 5,000.00 |
| 2 | Chettikulam | 100.00 |
| 3 | Aanapottai | 1000.00 |
| 5 | Mathias Nager | 2,000.00 |
| 6 | Ganadasapuram | 630.00 |
| 7 | Navalkadu | 5,000.00 |
| 8 | Erachakulam | 1,000.00 |
| 9 | Parvathipuram | 3,000.00 |
| 10 | Thenikulam | 3,000.00 |
| 11 | Kanyakumari | 1,000.00 |
| 13 | Mantharamputur | 1,000.00 |
| 14 | Bhoothapandi | 1,000.00 |
| 15 | Mukkadal | 1,000.00 |
| 16 | Aloor | 1,000.00 |
| | **Total** | **25,730.00** |

## 13. Mission

| No. | Missions | Amount |
|---|---|---|
| 1 | Kalikulam | 1,000.00 |
| 2 | Thirunelveli | 1,000.00 |
| 3 | Devathanampatti | 2,000.00 |
| 4 | Kalakkadu | 1,000.00 |
| | **Total** | **5,000.00** |
| | **Grand Total** | **1,143,564.00** |

# இளம் குருமடச் செய்திகள்

## மறைபரப்பு தளங்கள் சந்திப்பு

15-08-2023 அன்று இளம் குருமட அருட்சகோதரர்கள் நமது மறைமாவட்டத்தின் மறைபரப்புத் தளங்களாகிய தேனிக்குளம், ஞானதாசபுரம், மத்தியாஸ்நகர், முக்கடல் மற்றும் பார்வதிபுரம் மறைபரப்புத் தளங்களை சந்தித்தனர். இம்மறைபரப்புத் தளங்களின் இறைமக்கள் மற்றும் அருட்தந்தையர்கள் அருட்சகோதரர்களை வரவேற்றனர். இச்சந்திப்பு அருட்சகோரர்களுக்கு ஊக்கம் அளித்ததோடு ஒரு புது அனுபவமாய் இருந்தது.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்ட தினவிழா

மார்த்தாண்டம் மறைவட்ட தினமானது "இயற்கையை பாதுகாப்போம், நெடுநாள் வாழ்வோம்" என்ற மைய சிந்தனையோடு 06.08.2023 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. விழாவின் தொடக்கமாக தூய சகாய மாதா மலங்கரை கத்தோலிக்க தேவாலயம், குழித்துறையில் வைத்து துவக்க ஜெபத்துடன் ஆரம்பமானது. குழித்துறை பங்கின் பங்குத்தந்தை அருட்தந்தை கெபின் அனைவரையும் வரவேற்று பேச, அருட்தந்தை பெர்னார்டு துவக்கஉரை ஆற்றினார்கள். தொடர்ந்து மாபெரும் விழா பவனி ஆரம்பமானது. இப்பவனி குழித்துறை பங்கிலிருந்து ஆரம்பித்து கண்ணக்கோடு பங்கில் சென்றடைந்தது. அங்கு வைத்து விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைவட்ட பொருளர் திரு. ராபின்சன் அனைவரையும் வரவேற்று பேச, மறைவட்ட செயலர் திரு. ஷைன் ஜோஸ் அறிக்கை வாசித்தார். தொடர்ந்து மார்த்தாண்டம் மறைவட்ட குருகுல முதல்வர் Msgr. ஜோஸ் பிறைட் அவர்கள் வாழ்த்துரையும், மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையுரையும், குழித்துறை பங்கு மறைக்கல்வி தலைமை ஆசிரியை திருமதி. ஷீபா சிறப்புரையும் ஆற்றினார்கள். இவ்விழாவின் மையகருத்தை வலுப்படுத்தும் வகையில் மரம் ஒன்று நடப்பட்டது, அத்தோடு அனைத்து பங்குகளுக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டது. இறுதியாக மறைவட்டத்திலுள்ள அனைத்து பங்குகளிலிருந்தும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. திரு. மரிய நோபர்ட் அனைவருக்கும் நன்றி கூற, பாப்பரசர் கீதத்துடன் விழா சிறப்பாக முடிவடைந்தது. இந்நிகழ்ச்சியினை மறைவட்ட முதன்மை குரு பேரருட்தந்தை ஜோஸ் பிறைட் அவர்களும், கண்ணக்கோடு பங்குத்தந்தை, அருட்தந்தை அர்னால்டு டயஸ், மறைவட்ட செயலர் திரு. ஷைன் ஜோஸ், மறைவட்ட குருக்கள் செயலர் அருட்தந்தை கெபின் ஆகியோர் ஒழுங்கு படுத்தினார். இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளும் இறைமக்கள் சமூகமும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பங்கு பேரவை ஒப்புதல் பெற்ற பங்கின் பெயர்கள்

## 2023-'24

| | |
|---|---|
| 1. கிறிஸ்து அரசர் பேராலயம் | 22. மரியகிரி ஆலயம் |
| 2. கண்ணக்கோடு ஆலயம் | 23. ஜார்ஜ் நகர் ஆலயம் |
| 3. பெருவழிகடவு ஆலயம் | 24. பிலாங்காலை ஆலயம் |
| 4. வலியவிளை ஆலயம் | 25. முதலார் ஆலயம் |
| 5. ஆதிச்சவிளாகம் ஆலயம் | 26. செருப்பாலூர் ஆலயம் |
| 6. புஷ்பகிரி ஆலயம் | 27. சாரூர் ஆலயம் |
| 7. பாத்திமநகர் ஆலயம் | 28. நடைக்காவு ஆலயம் |
| 8. வெட்டுக்குழி ஆலயம் | 29. தேனிக்குளம் ஆலயம் |
| 9. குளப்பாறை ஆலயம் | 30. மேக்கோடு ஆலயம் |
| 10. கோயிக்கல்தோப்பு ஆலயம் | 31. காட்டுவிளை ஆலயம் |
| 11. கடுவாகுழி ஆலயம் | 32. ஆழ்வார்கோவில் ஆலயம் |
| 12. சூசைபுரம் ஆலயம் | 33. ஜார்ஜ் நகர் ஆலயம் |
| 13. கணபதிக்கல் ஆலயம் | 34. குழித்துறை ஆலயம் |
| 14. சிவலோகம் ஆலயம் | 35. மாத்தூர்கோணம் ஆலயம் |
| 15. பேச்சிப்பாறை ஆலயம் | 36. முக்கடல் ஆலயம் |
| 16. பின்குளம் ஆலயம் | 37. அருமனை ஆலயம் |
| 17. சீறோ பாயின்ட் ஆலயம் | 38. கோணம் ஆலயம் |
| 18. குலசேகரம்புத்தூர் ஆலயம் | 39. அன்பு நகர் ஆலயம் |
| 19. அணக்கரை ஆலயம் | 40. ஊரம்புவிளை |
| 20. சிதறால் ஆலயம் | 41. உண்ணாமலைக்கடை |
| 21. மாத்தார் ஆலயம் | |

# மேரி மக்கள் துறவற சபை

### 38-வது நினைவு தினம் மதர் மேரி கல்லறைக்கல்

மேரி மக்கள் துறவறச் சபையின் துணை மதர் மேரி கல்லறைக்கல் அவர்களின் 38-வது நினைவு ஆண்டை முன்னிட்டு 27.08.2023 அன்று மாலை அவ'ரது கல்லறையில் சிறப்பு ஜெபம் நடைபெற்றது. 28.08.2023 அன்று காலையில் மேதகு ஆயர் சாமுவேல் மார் ஐரேனியூஸ் தலைமையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட குருக்கள் இணைந்து திருப்பலி ஒப்புக் கொடுத்தார்கள். தொடர்ந்து கல்லறையில் தூபமன்றாட்டும், 12-ம் வகுப்பில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்க பரிசுகளும் வழங்கப்பட்டது.



REV. MOTHER MARY KALLARACKAL DM
Co- foundress
Congregation of the Daughters of Mary
Born: 17-04-1898 Died: 30-07-1985

**மதர் மேரி கல்லறைக்கல்**
**38-வது நினைவு**



# மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் விண்ணக பிறப்பின் 40-வது ஆண்டின் நிறைவு விழா (மாணிக்க விழா)

மார்த்தாண்டம் மண்ணின் முதல் நற்செய்தியாளர் மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் 40-வது நினைவு நாடை முன்னிட்டு 22-08-2023 அன்று "மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில்" என்ற தலைப்பில் ஆய்வரங்கம் நடைபெற்றது. ஆய்வரங்கத்தின் நடுவராக மேதகு வின்செென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்களும் கருத்தாளர்களக பேரருட்தந்தை கிறிஸ்டோபர், அருட்தந்தை விபின் வில்சன், அருட்சகோதரி மேரி பிரசாத் மற்றும் திரு.தேவதாஸ் ஆசிரியர் அவர்களும் மிக சிறப்பாக ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தார்கள்.

23-08-2023 அன்று காலை 9.00 மணிக்கு மேதகு ஆயர்களுக்கு வரவேற்பும் தொடர்ந்து மலங்கரை கத்தோலிக்க திருஅவையின் தந்தையும் தலைவருமாகிய மோறான் மோர் பசேலியோஸ் கிளீமிஸ் கத்தோலிக்க ஆண்டகை அவர்கள் தலைமையில் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை, மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸ்ஸோஸ்டோம் ஆண்டகை, மேதகு பேராயர் தோமஸ் மார் கூர்லோஸ் ஆண்டகை, மேதகு ஆயர் யூஹானோன் மார் தியோடேசியோஸ் ஆண்டகை, மேதகு ஆயர் ஆன்றனி மார் சில்வனோஸ் ஆண்டகை, மேதகு ஆயர் மாத்யூ மார் போளிகார்ப்பஸ் ஆண்டகை, மேதகு ஆயர் பீட்டர் ரெமீஜியூஸ் ஆண்டகை, குருகுல முதல்வர்கள், கோர் எப்பிஸ்கோப்பாமார்கள் குருக்கள் இணைந்து திருப்பலி நிறை வேற்றினார்கள். தொடர்ந்து நினைவுக்கூட்டம் நடைப்பெற்றது. அதில் மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் நினைவாக 6 புத்தகங்கள் வெளியிடப்பட்டது. 1. கடவுளின் ஒளிவிளக்கு (அவரோடு இணைந்து வாழ்ந்தவர்களின் அனுபவ பகிர்வுகள்) 2. தெக்கின்றறே பிறகாச கோளங்கள் 3. மரிய தீபம் (Mother காருண்ணியா) 4. பாலாவிலிருந்து மார்த்தாண்டத்திற்கு (அருட்தந்தை மரியஜாண்) 5. மார்த்தாண்டத்தின் சிற்பி (Sr. நீற்றா கிரேஸ்) 6. என்னுடைய மறைபரப்புப் பணி அனுபவங்கள் (Sr. எமிலியானா) நினைவு கூட்டத்தை தொடர்ந்து அவரது கல்லறையில் தூப மன்றாட்டு நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் அருட்தந்தையர்கள் ஏராளமான அருட்கன்னியர்கள் இறைமக்கள் கலந்துகொண்டனர்.

# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**தேனீ வளர்ப்பு மற்றும் தேன் தயாரிப்பு திட்டம்**

**தேனீ வளர்ப்பு பயிற்சி**

மிட்ஸ் நிறுவனத்தின் புது முயற்சியாக தேனீ வளர்ப்பு மற்றும் தேன் தயாரிக்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. அதற்காக 10.08.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற பயிற்சியில் தமிழக சமூகப்பணி மையத்தின் இயக்குநர் அருட்தந்தை இயேசுதாஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மிட்ஸின் திட்டங்கள் அனைத்தும் சிறப்பாக செயல்படுவதாக பாராட்டினார்கள். மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் திட்டத்தின் நோக்கம் குறித்து விளக்கமளித்தார்கள். மிட்ஸ் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள் இந்த திட்டத்தின் வழியாக வழங்கப்படும் தொகையினை வைத்து பயனுள்ள முறையில் வெற்றிகரமாக தேன் தயாரிப்பு தொழில் செய்ய வேண்டும் என்று பயனாளிகளுக்கு அறிவுறுத்தினார்கள். பின்னர் திரு.லாசர் அவர்கள் தேன் வளர்ப்பு தொழில் குறித்து செய்முறை விளக்கத்துடன் பயனாளிகளுக்கு பயிற்சியளித்தார்கள். தொடர்ந்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் வட்டியில்லா கடனாக நபருக்கு ரூபாய் 20,000/- வீதம் 12,40,000/- க்கான காசோலைகளை 62 பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

**நலத் திட்ட உதவிகள்**

19.07.2023 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக நாகர்கோவில் பணிமண்டலத்தில் செயல்பட்டு வரும் 10 சுய உதவி குழுக்களில் உள்ள 40 உறுப்பினர்களுக்கு ரூபாய் 20,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

21.07.2023 அன்று விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக மார்த்தாண்டம் பணிமண்டலத்தில் செயல்பட்டு வரும் 3 சுய உதவி குழுக்களில் உள்ள 12 உறுப்பினர்களுக்கு ரூபாய் 6,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

08.08.2023 அன்று கோல்பிங் சிறப்பு சிறு தொழில் திட்டத்தின் வழியாக கோல்பிங் குடும்பங்களில் உள்ள 8 உறுப்பினர்களுக்கு ரூபாய் 8,00,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.



08.08.2023 அன்று மிட்ஸ் ஜீவன் திட்டத்தின் வழியாக புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 8 நபர்களின் மருத்துவ செலவிற்கு நபருக்கு ரூபாய் 5000ஃ வீதம் ரூபாய் 40,000/- வழங்கப்பட்டது.

**பிற நிகழ்வுகள்**

26.07.2023 அன்று மிட்ஸ் நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் கோர்எப்பிஸ்கோப்பா பிறேம் குமார் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அவர்களுடன் ஆஸ்திரேலியாவை சேர்ந்த திரு.ஜாண் ஆன்ட்ரியன் இவான்ஸ், திருமதி.திரேஸ் மேரி இவான்ஸ், திரு. ஆன்றனி வால்ஸ், திருமதி. ஜானி வால்ஸ் ஆகியோரும் வருகை தந்து மிட்ஸ் நிறுவனத்தை பார்வையிட்டு மிட்ஸின் செயல்பாடுகள் குறித்து மிட்ஸ் பணியாளர்களுடன் கலந்துரையாடினர்.

30.07.2023 அன்று மிட்ஸ் அறிவு திறன் பயிற்சியானது மிட்ஸ் அலுவலகம், மரியகிரி, ஆற்றூர், உண்ணாமலைகடை மற்றும் நாகர்கோவில் மிட்ஸ் மண்டல அலுவலகம் ஆகிய பகுதிகளில் வைத்து நடைபெற்றது. இந்த தேர்வில் மொத்தம் 188 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

05.08.2023 முதல் 09.08.2023 ஆகிய ஐந்து தினங்கள் குடும்ப வளர்ச்சி திட்ட தேசிய அலுவலகத்தின் பணியாளர் திரு.ஆல்டோ ஆன்றனி அவர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்து மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டு வரும் குடும்ப வளர்ச்சி திட்டத்தின் இரண்டு அலகுகளில் உள்ள 24 பயனாளிகளின் இல்லங்களை சந்தித்து அவர்கள் செய்து வரும் சிறு தொழில்களின் வளர்ச்சி குறித்து மதிப்பீடு செய்தார்கள். இறுதியில் மிட்ஸ் இயக்குநருடன் குடும்ப வளர்ச்சி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**செப்டம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் **15, 16** ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.

# HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

## HOM - சிறப்புப் பள்ளி ஜூபிலி ஆண்டு துவக்க விழா மற்றும் செயல்திட்ட துவக்கவிழா

குழித்துறை, HOM - அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப் பள்ளியின் 25-ம் ஆண்டின் துவக்க விழா மற்றும் 10 அம்ச செயல்திட்ட துவக்கவிழா நிகழ்வானது “என் மாற்றமே சமூக மாற்றம்” என்ற மையச் சிந்தனையுடன் 22.07.2023 காலை 10.30 மணியளவில் கூட்டு திருப்பலியுடன் ஆரம்பமானது. தொடக்க நிகழ்வாக சிறப்புக் குழந்தைகள் வரவேற்பு நடனம் ஆடியும் ஆரத்தி எடுத்தும் அருட்தந்தையர்களை வரவேற்றார்கள். மறைமாவட்ட முதன்மை குருவால் ஜூபிலி விளக்கின் முதல் ஒளி ஏற்ற தொடர்ந்து முன்னாள் இயக்குநர்கள், HOM பணியாளர்கள், சிறப்பு குழந்தைகள், பெற்றோர்கள் என 25 நபர்கள் ஒளி ஏற்றினார்கள். தொடர்ந்து நடைபெற்ற காணிக்கை பவனியில் பணியாளர்கள், சிறப்புக் குழந்தைகள், பெற்றோர்கள் பங்கேற்று சமையலுக்குத் தேவையான பொருட்களை வழங்கினார்கள். கூட்டு திருப்பலியை மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வரும் HOM - முன்னாள் இயக்குநருமாகிய மோண்சிஞ்ஞோர் ஜோஸ்பிறைட் அவர்கள் தலைமைத்தாங்கி திருப்பலி ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலியின் இறுதியில் குருகுல முதல்வர் ஜூபிலி ஆண்டு ஜெபம் சொல்லி தர அனைவரும் ஏற்றுச் செல்ல ஜெபித்தார்கள்.

தொடர்ந்து ஜூபிலி ஆண்டு செயல்திட்ட துவக்க நிகழ்வு நடைபெற்றது. HOM - இயக்குநர் / தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் விழா அறிமுக உரையுடன் அனைவரையும் வரவேற்றார்கள். அருட்தந்தை ஜாண்குமார், அருட்தந்தை புஷ்பராஜ்,



அருட்தந்தை இராபர்ட் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் மோண்சிஞ்ஞோர் ஜோஸ் பிறைட் அவர்கள் ஜூபிலி ஆண்டு 10 அம்ச செயல்திட்டத்தை வெளியிட்டு தலைவருரையாற்றினார்கள். HOM சிறப்புப் பள்ளி தலைமையாசிரியர் திரு. M. டென்னிஸ் அவர்கள் நன்றிகூற பாப்பரசர் கீதத்துடன் நிகழ்வுகள் நிறைவடைந்தது. இந்நிகழ்ச்சியில் சிறப்புக் குழந்தைகள், பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் சிறப்புப் பள்ளி பணியாளர்கள் என 100 -க்கும் மேற்பட்டோர் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர்.

## ஹோம் – சிறப்புப் பள்ளியில் 77–வது சுதந்திர தின விழா கொண்டாட்டம்

குழித்துறை, ஹோம் - மனவளர்ச்சிக் குன்றியோருக்கான சிறப்புப் பள்ளியில் 76 -வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியின் தொடக்கமாக சிறப்புக் குழந்தைகளின் அணிவகுப்பு மரியாதை நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து சிறப்புப் பள்ளியின் தசைப்பயிற்சியாளர் Dr. ஜென்னிங்ஸ் அவர்கள் விழா அறிமுக உரையோடு அனைவரையும் வரவேற்றார்கள். மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல்நிலைய சிறப்பு காவல் ஆய்வாளர் திருமதி விஜிகலா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக்கொண்டு தேசியக் கொடியேற்றி கொடி மரியாதை செய்தார்கள். தொடர்ந்து சிறப்புக் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. சிறப்புப் பள்ளி மாணவன் மனோஜின் சுதந்திர தின உரையாற்றினார் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி விஜிகலா அவர்கள் சுதந்திரதின சிறப்புரையாற்றினார்கள். அவர்தம் உரையில் சுதந்திர போராட்ட தியாகிகளை நினைவு கூர்ந்தார்கள். தொடர்ந்து ஹோம் சிறப்புப் பள்ளி தாளாளர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் சுதந்திர

இந்தியாவின் மகத்தான பண்புகளையும் அவற்றிற்கான தியாகங்களையும் எடுத்துக்கூறி தலைமையுரையாற்றினார்கள். சிறப்புப் பள்ளி தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்கள் நன்றியுரை கூறினார்கள். இறுதியாக நாட்டுப்பண் பாடலுடன் சுதந்திர தினவிழா கொண்டாட்ட நிகழ்வுகள் நிறைவுப்பெற்றது. சிறப்பாசிரியை திருமதி அஜிதா குமாரி அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள். இந்நிகழ்வில், மார்த்தாண்டம் அனைத்து மகளிர் காவல் நிலைய தலைமைக் காவலர்கள் திருமதி கிளாடிஸ் ஐறின், திருமதி ஸ்ரீலேகா மற்றும் சிறப்புக் குழந்தைகள், பணியாளர்கள், பெற்றோர்கள் என சுமார் 100 பேர் கலந்துக் கொண்டு சிறப்பித்தார்கள்.

## பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை சஜீவ்
செப்டம்பர் 04



அருட்தந்தை ராபர்ட்
செப்டம்பர் 17



அருட்தந்தை மைக்கிள் முக்கம்பாலத்
செப்டம்பர் 29



அருட்தந்தை ஜெறோம்
செப்டம்பர் 30



## ஆயரின் ஆகஸ்ட் மாத நிகழ்வுகள்



6 ➢ மார்த்தாண்டம் மறைவட்ட தின கொண்டாட்ட கூடுகையில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

15 ➢ அன்னையின் விண்ணேற்பு மற்றும் சுதந்திர தினத்தை முன்னிட்டு திருவனந்தபுரம் உயர் குருமடத்தில் திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

19 ➢ பாளையங்கோட்டை மறைமாவட்டத்தின் மகாராஜ நகர் பங்கின் 25-வது ஆண்டு ஜூபிலி நிறைவு திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

20 ➢ பிலாங்காலை புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

22 ➢ மோண். ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் விண்ணக வாழ்வின் 40-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மார்த்தாண்டம் கிறிஸ்துராஜா பள்ளியில் வைத்து நடைபெற்ற கருத்தரங்கிற்கு தலைமை தாங்கினார்.

23 ➢ மோண். ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் விண்ணக வாழ்வின் 40-வது ஆண்டு நிறைவு நினைவு திருப்பலியில் கலந்துக் கொண்டார்.

27 ➢ களியக்காவிளை தூய அந்தோணியார் ஆலய திருவிழா திருப்பலியில் கலந்துக் கொண்டு மறையுரையாற்றினார்.

27 ➢ குலசேகரம் C.S.I வட்டாரம் சார்பாக ஒழுங்குப்படுத்தப்பட்ட Youth Meet கூடுகையில் இளையோருக்கான சிறப்பு வகுப்பை வழிநடத்தினார்.

27 ➢ குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்ற தாய்மார் சங்க கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

27 ➢ நடைக்காவு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் புதிதாக கட்டியெழுப்பப்பட்ட குருசடியை அர்ச்சித்து அருளினார்.





# இம்மாதம் நினைவு கூர

செப்டம்பர் 2023

1 – எட்டு நோன்பு ஆரம்பம்
இறைவாக்கினார் யோசுவா

2 – புனித சீமோன் தெஸ்தூனி

3 – உருமாற்றத்திற்குப்பின் நான்காம் ஞாயிறு

5 – புனித அன்னை தெரசா

8 – தூய இறையன்னையின் பிறப்புத் திருநாள்
எட்டு நோன்பு நிறைவு

9 – புனித யோவாக்கீம், புனித அன்னம்மாள்

10 – உருமாற்றத்திற்குப்பின் ஐந்தாம் ஞாயிறு

14 – சிலுவைத் திருநாள்

15 – தூய வியாகுல அன்னை

16 – புனித சிப்ரியான்

17 – சிலுவைத் திருநாளுக்குப்பின் முதல் ஞாயிறு

19 – புனித ஜனுவாரியூஸ்

20 – மலங்கரை கத்தோலிக்க மறுஒன்றிப்பு தினம்

21 – தோமஸ் மார் எவுசேபியஸ், கீவற்கீஸ் மார் மக்காரியோஸ், யூஹானோன் மார் தெயடோஷியஸ் ஆண்டகையரின் ஆயர் திருநிலைப்பாடு

23 – புனித பாத்ரெ பியோ

24 – சிலுவைக்காலத்திற்குபின் இரண்டாம் ஞாயிறு

27 – புனித வின்செண்ட் தே பவுல்

28 – சக்கரியாஸ் மார் அத்தனாசியோஸ் ஆண்டகையின் நினைவு

29 – தலைமை வானதூதர்களான புனித மிக்கேல், புனித கபரியேல், புனித இரபேல்

30 – புனித ஜெறோம்

5 

8 

15 

23 

27 

# மோண்சிஞ்ஞோர் ஜோசப் குழிஞ்ஞாலில் அவர்களின் விண்ணகவாழ்வின் 40-வது ஆண்டின் நிறைவு விழா









## DM Sisters

மதர் மேரி கல்லறைக்கல் அவர்களின் நினைவு



ஆய்வரங்கம்




## MIDS





## மார்த்தாண்டம் மறைவட்ட தினவிழா








## HOM Special School

ஜூபிலி ஆண்டு துவக்க விழா







சுதந்திர தினவிழா கொண்டாட்டம்



